REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 2 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்




வடக்கின்
உதயம்
11, 12

வரு. 88 இல. 260 | November 02,Monday, 2020 | 20பக்கங்கள் | 30/-

## கொரோனா வைரஸுக்கு தீர்வு காணும் வரை நாட்டை பாதுகாப்பாக முன்நகர்த்துவது அவசியம்

### நீதிமன்ற கட்டட தொகுதியில் தொற்றுநீக்கம் செய்யும் நிகழ்வில் நீதியமைச்சர் அலி சப்ரி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் நோய் தடுப்புக்கான தடுப்பூசி அல்லது அதற்கான நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ளும்வரை நாட்டைப் பாதுகாப்பாக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியமுள்ளதென நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க நீதிமன்றத்துக்கு வரும் பொதுமக்கள் மற்றும் சட்டத்தரணிகளின் சுகாதார ப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு கொழும்பு புதுக்கடை நீதிமன்ற கட்டடத் தொகுதியில் வைரஸ் தொற்று ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு புதுக்கடை நீதிமன்றத் தொகுதி சுற்றாடலில் வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்றைய தினம் இடம்பெற்றன. அதனை ஆரம்பித்து வைத்து கருத்து தெரிவித்த போதே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 06

## கொரோனாவை கட்டுப்படுத்த ஜனாதிபதி அதிரடி தீர்மானங்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மக்களின் உயிருக்கு தீங்கு விளைவிக்காமல், பொருளாதாரத்தை மோசமாக பாதிக்காமல் கொவிட்19 பரவுவதைத் தடுக்கும் பொருட்டு கொவிட்19 ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி உறுப்பினர்களுடன் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

அதன்படி மக்களை தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு பதிலாக, அவர்களை தங்கள் சொந்த வீடுகளில் 06

### கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரிப்பு கட்டுக்கடங்காது செல்வதனால்

## மேல் மாகாணத்

## ஊரடங்கு 09 வ






### இராணுவத் தளபதி சவேந்தி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு நவம்பர் 9ஆம் திகதி காலை 5மணி வரை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்றமையினால் அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்பொருட்டு, தனிமைப்படுத்தல் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவு குறித்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அவர் வெளியிட்டுள்ள விசேட காணொளியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்னதாகவே ஊர 68 பொலிஸ் பிரிவுகளிலும் தொடர்ந்து ஊரடங்கு அமுலில் இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மேல் மாகாணத்தை தவிர, இரத்தினபுரி மாவட்டத்தின் எஹெலியகொட பொலிஸ் பிரிவு, குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் நகர் மற்றும் குளியாபிட்டிய பொலிஸ் பிரிவு ஆகியவற்றிற்கும் எதிர்வரும் 9ஆம் திகதி வரை ஊரடங்கு தொடரும் எனவும் இராணுவ தளபதி குறிப்பிட்டார். 06

## PCR முடிவுகளுக்கு காத்திருப்போர் சமூகத்திற்குள் செல்ல வேண்டாம்

### ஆபத்தானது என்கிறது அரச மருத்துவர் சங்கம்

ரிசோதனை முடிவுகளுக்காக தும் நபர்கள் சமூகத்திற்குள் ஆபத்தானது என்று அரச அதிகாரிகள் சங்கம் தெரிவித்

வளை, யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ அதிகாரி பிரிவில் ில் உணவகம் நடத்தும் உரி நக்கு கொரோனா தொற்று நித்தப்பட்ட நிலை யில் அவருடன் பேருந்தில் பயணித்தவர்களில் 37 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 6 பேர் தொலைபேசியை நிறுத்தி வைத்து தலைமறைவாகியுள்ளனர்.

அவர்கள் 6 பேரையும் கண்டறியும் பணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

### திபதி, பிரதமரின் ஆலோசனைக்கமைய

## னிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அரசு உதவி

### 10,000 ரூபா பெறுமதியான உணவுப் பொதி வழங்கல்

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கிணங்க தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்காக பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான உணவு பொதி ஒன்றை இலவசமாக பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, 06

## கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை 10,856 ஆனது

### குணமடைந்தோர் தொகை 4,905 ஆக உயர்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுநோயாளிகளின் எண்ணிக்கை நேற்று பிற்பகல் வரை 10,856 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை நேற்று 506 வைரஸ் தொற்று நோயாளிகள் குணமடைந்துள்ளதுடன் மொத்தமாக இதுவரை 4905 பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பி உள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் 5738 பேர் நாட்டின் பல்வேறு ஆஸ்பத்திரிகளிலும் மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் 06

## பழுதடைந்த PCR இயந்திரங்களை திருத்தியமைத்துள்ள சீன குழுவினர்

### இன்று திங்கள் முதல் வழமையான பரிசோதனைகளுக்கு ஏற்பாடு

பழுதடைந்த PCR இயந்திரம் இன்று முதல் மீண்டும் செயற்படும் என சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

முல்லேரியா மருத்துவமனையில் பழுதடைந்த PCR இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக சீனாவிலிருந்து வந்த தொழில்நுட்பவியலாளர்கள் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறினை அடையாளம் கண்டுள்ளனர் என சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

பத்துமணி நேரத்திற்கு மேல் இயந்திரத்தை பழுதுபார்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட தொழில்நுட்பவியலாளர்கள் இன்று மீண்டும் இயந்திரம் செயற்பட ஆரம்பிக்கும் என தெரிவித்துள்ளனர்.

PCR இயந்திரம் 100 வீதம் சரியாக செயற்படுகின்றது என்பதை உறுதி செய்வதற்காக சில சுற்று சரிபார்ப்பு நடவடிக்கைகள் 06

### பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு

## தீபாவளி முற்பணமாக ரூ.10,000 வழங்க வேண்டும்

**நுவரெலியா தினகரன் நிருபர்**



எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 10,000 ரூபா முற்பணம் வழங்குவதற்கு பெருந்தோட்ட கம்பனிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த வருடம் நல்லாட்சி அரசாங்கத்தில் நாங்கள் இருந்த பொழுது தேயிலை சபையுடன் முற்போக்கு கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி 10,000 ரூபா பெற்றுக் கொடுத்தோம். இந்த முறையும் அந்த தொகையை வழங்க வேண்டும் 06

## TNA யின் செயலாளராக மாவை சேனாதிராசா?

### பங்காளிக் கட்சிகள் ஆராய்வதாக தகவல்



தமிழ் தேசிய கூட்டமைப்பின் கட்டமைப்பில் அதிரடியான மாற்றங்க

## டாக்டர்கள் இருவர் உட்பட மூவருக்கு கொரோனா தொற்று

### களுபோவில வைத்தியசாலையில் அனர்த்தம்



களுபோவில வைத்தியசாலையின் வைத்தியர்கள்

## ஊரடங்கால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5000 ரூபா

### 02 ஆம் கட்டம் நாளை செவ்வாய் ஆரம்பம்



ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக பல்வேறு

### தனுஷ்கோடி வழியாக படகுமூலமாக

## இலங்கைக்கு கடத்தவிருந்த 2,000 கிலோ மஞ்சள் மீட்பு

**மன்னார் குறூப் நிருபர்**



தனுஷ்கோடி கடல் வழியாக